**செய்தி வெளியீடு** **நாள்: 29.01.2025**

**சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 2023-2024 மற்றும் 2024 - 2025 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட 96 அறிவிப்புகளில் 9 பணிகள் நிறைவடைந்தும் மற்ற அனைத்து பணிகளும் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன, குறிப்பாக அனைத்துப் பணிகளும் வரும் டிசம்பர் 2025க்குள் முடிவடையும்.**

**மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தகவல்.**

*****

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** நல்வழிகாட்டுதலின்படி இன்று (29.01.2025) சென்னை, எழும்பூர், தாளமுத்து நடராசன் மாளிகையில் உள்ள சி.எம்.டி.ஏ. அலுவலகக் கூட்டரங்கில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** தலைமையில் 2023-2024 மற்றும் 2024-2025ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின் தற்போதிய நிலை குறித்தும், அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைக்கும் திட்டங்கள் குறித்தும், நிறைவு பெற்ற திட்டங்களை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவது குறித்தும் விரிவான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 2023-2024 மற்றும் 2024 - 2025 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட 96 அறிவிப்புகளில் 9 பணிகள் நிறைவடைந்தும் மற்ற அனைத்து பணிகளும் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன, அனைத்துப் பணிகளும் வரும் டிசம்பர் 2025க்குள் முடிவடையும்.

குறிப்பாக பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் என 25 பணிகளும், பேருந்து நிலையங்கள் மற்றும் போக்குவரத்து மேம்பாடு என 18 பணிகளும், சமுதாய நலக்கூடங்கள் என 13 பணிகளும், நீர்நிலை மேம்பாடு மற்றும் கட்டமைப்பு என 12 பணிகளும், பள்ளிகள் மற்றும் பிற கல்வி மேம்பாடு என 5 பணிகளும், சந்தை மேம்பாடு என 8 பணிகளும், புனர்வாழ்வு மையங்கள் அமைத்தல் என 3 பணிகளும், கொள்கை ரீதியான 3 திட்டங்கள் என மொத்தம் 87 பணிகள் என **அனைத்துப் பணிகளும் வரும் டிசம்பர் 2025க்குள் முடிவடையும்.**

இக்கூட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., அவர்கள், முதன்மைச் செயல் அலுவலர் திரு.அ.சிவஞானம், இ.ஆ.ப., அவர்கள், தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் திரு.எஸ்.ருத்ரமூர்த்தி, திரு.அ.பாலசுப்ரமணியன், திரு.ந.ரவிக்குமார், தலைமை நிர்வாக அலுவலர்கள் திருமதி.மு.இந்துமதி, டாக்டர் பிரின்சிலி ராஜ்குமார், கண்காணிப்பு பொறியாளர் திரு.ராஜமகேஷ்குமார், செயற்பொறியாளர்கள், ஆகியோர் கலந்து கொண்டனர்.

Verified RealEstate ™